# 2016ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டத்திற்கான வழிகாட்டிக் கையேடு

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

ஐப்பசி 2016

## 2016 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டத்திற்கான வழிகாட்டிக் கையேடு

**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்**

**ஐப்பசி 2016**

இலங்கைப் பாராளுமன்றமானது 2016 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 25 ஆம் திகதி இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டத்தினை ஒருமனதாக இயற்றியது. இந்தச் சட்டவாக்கமானது காணப்படாமைக்கான சான்றிதழ்களை வழங்குதல் தொடர்பானதாகும். இக்கையேடானது இச்சட்டவாக்கத்தின் முக்கிய அம்சங்களை சுருக்கமாக எடுத்துரைக்கின்றது.

காணப்படாமைக்கான சான்றிதழானது பாதிக்கபட்டவர்களுக்குரிய ஒரு அடையாளமாகவும் மற்றும் நடைமுறைக்கும் அவசியமாதலால் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. இது குறிப்பிட்ட எண்ணிக்கையான மக்கள் ஒன்றில் காணாமற்போயுள்ளனர் அல்லது மறைந்துபோயுள்ளனர் என்பதனை அங்கீகரித்து அரசினால் வழங்கப்படுகின்ற உத்தியோகபூர்வமான ஆவணமாகும். காணாமற்போயுள்ள அல்லது மறைந்துபோயுள்ள தமது அன்புக்குரியவர்கள் உயிருடன் இருப்பார்கள் என்ற எதிர்பார்ப்புடன் அவர்களைத் தேடும் குடும்பங்களுக்கும் இது ஒரு முக்கிய படியாக அமையும். நடைமுறையிலே காணப்படாமைக்கான சான்றிதழானது ஆதனங்களை மற்றும் ஏனைய விடயங்களைக் கையாளுதல் போன்ற கீழே பட்டியற்படுத்தப்பட்டுள்ள நன்மைகளைப் பெற்றுக்கொள்வதனை இலகுபடுத்துகின்றது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது காணாமற் போனமைக்கான சான்றிதழின் அறிமுகத்தின் வெற்றி உட்பட நிலைமாறு கால நீதி தொடர்பான பல சீர்திருத்தங்களுக்காகவும் வாதிட்டுள்ளது. காணாமற் போனமைக்கான சான்றிதழானது, தமது அன்புக்குரியவர்கள் காணாமற்போயுள்ள அல்லது மறைந்துபோயுள்ள குடும்பங்கள் எதிர்கொண்டு வந்த சவால்களை தீர்த்தலிலே வரவேற்கத்தக்க ஒரு முன்னேற்றகரமான படியாகும் என்பதுடன் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது மேலதிக தாமதங்களின்றி இச்சட்டவாக்கத்தினை அமுல்படுத்துமாறு அதிகாரிகளை வலியுறுத்துகின்றது. காணப்படாமைக்கான சான்றிதழ் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் தயாரிக்கப்பட்ட ஆவணத்தை வாசிக்கவும். கிடைக்கக்கூடிய வலைத்தள முகவரி: www.cpalanka.org மற்றும் www.tjsrilanka.org

### காணப்படாமைக்கான சான்றிதழுக்காக விண்ணப்பிப்பதற்கான கட்டளைக் கற்கள்

பிரிவு 8 அ. (1) எவரேனுமாள் காணாமற் போனவராக அறிக்கையிடப்பட்டு, அவர் இருந்திருப்பாராயின் அவரைப்பற்றி இயல்பாக கேள்விப்பட்டிருக்க வேண்டியவர்கள் ஓராண்டுக்கு மேற்பட்ட காலப் பகுதியொன்றுக்கு அவர் பற்றி கேள்விப்பட்டிருக்காதவிடத்து அத்தகைய ஒரு நபர் தொடர்பாக காணப்படாமைக்கான சான்றிதழுக்காக விண்ணப்பிக்க இயலும்.

பிரிவு 8 அ. (1) இன் கீழ் காணாமற் போதலானது,

- வடக்கு அல்லது கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற மோதலில் அல்லது அதன் பின்விளைவில்,
- அல்லது அரசியல் அமைதியின்மை அல்லது சிவில் குழப்பங்களில் காணாமற்போதல்,
- அல்லது நடவடிக்கையில் காணாமல்போயுள்ளார் என அடையாளங் காணப்பட்டுள்ள ஆயுதப்படைகளின் அல்லது பொலிஸின் உறுப்பினர் ஒருவர் காணாமற்போயுள்ளதைக் குறிக்கும்.

## யார் காணப்படாமைக்கான சான்றிதழுக்காக விண்ணப்பிக்க இயலும்?

உறவினர் ஒருவர், காணப்படாமைக்கான சான்றிதழுக்காக விண்ணப்பிக்க இயலும். (பிரிவு 8 அ.(1))

பிரிவு 14 இன் படி, 'உறவினர்' என்பது கீழ்வரும் நபர்களை உள்ளடக்கும்:-

I. வாழ்க்கைத் துணை
II. தத்தெடுக்கப்பட்ட பிள்ளைகள், திருமணத்திற்கு அப்பால் பிறந்த பிள்ளைகள் அல்லது மறுதாரப்பிள்ளைகள் உள்ளடங்கலான பிள்ளைகள்
III. பெற்றோர் (ஒன்று விட்ட தாய், ஒன்று விட்ட தகப்பன், மகவேற்பவர் உட்பட)
IV. இரத்த அல்லது அரை இரத்தச் சகோதரர்கள் அல்லது மகவேற்கப்பட்ட சகோதரர்கள் அல்லது சகோதரிகள்
V. மாமன், மாமி, மச்சான்மார், மச்சாள்மார், மருமகள்மார், மருமகன்மார்
VI. பேரப்பிள்ளைகளும் பாட்டன் பாட்டிகளும்.

## தேவைப்படுத்தப்படுகின்ற ஆவணங்கள் யாவை?

பிரிவு 8 ஆ இன் கீழ் விண்ணப்பதாரி இணைக்க வேண்டிய ஆவணங்களாவன:

- பதிவு செய்யப்படுவதற்கு நாடப்படும் ஆள் காணாமற் போயுள்ளாரென விண்ணப்பதாரர் நம்புவதற்கான ஏதுக்களை எடுத்துக் கூறுகின்ற சத்தியக்கடதாசி

- காணாமற் போனவராக பதிவு செய்வதற்கு நாடப்படுகின்ற ஆள் எந்தக் கிராம அலுவலர் பிரிவில் வசித்தாரோ அந்தப் பிரிவின் கிராம அலுவலர் அல்லது அவர் கொண்டிருந்த நிரந்தரமான வதிவிடத்திற்குரிய கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலர் ஓராண்டுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு அத்தகைய ஆள் காணப்படவில்லை அல்லது ஆள்பற்றிக் கேள்விப்பட்டிருக்கவில்லை என்ற நிகழ்வை உறுதிப்படுத்தி வழங்குகின்ற அறிக்கை

- விண்ணப்பத்தினை ஆதாரப்படுத்துகின்ற வேறு ஏதேனும் சான்று

## நடபடிமுறை என்ன?

பிரிவு 8 அ.(2) விண்ணப்பமானது பதிவாளர் தலைமையதிபதிக்கு அல்லது அத்தகைய காணாமற்போன ஆள் எந்த மாவட்டத்தில் கடைசியாக வதிந்தாரோ அல்லது தனது நிரந்தரமான வதிவிடத்தைக் கொண்டிருந்தாரோ அந்த மாவட்டத்தின் மாவட்டப் பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

பிரிவு 8 இ- பதிவாளர் தலைமையதிபதி அல்லது மாவட்டப் பதிவாளர், அவரது அலவலகத்திலும் இயைபான கிராம அலுவலரின் அலுவலகத்திலும் உள்ள அறிவித்தற் பலகையில் இரண்டு வாரங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு அத்தகைய விண்ணப்பத்தின் பிரதியொன்றைக் காட்சிப் படுத்துதல் வேண்டும்.

பிரிவு 8 ஈ- அத்தகைய விண்ணப்பம் எவ்வாள் தொடர்பானதோ அத்தகைய ஆளை காணாமற் போனவராகப் பதிவு செய்வதற்கான அல்லது உறவினரின் நியமனத்துக்கான ஆட்சேபணைகள் விண்ணப்பத்தின் பிரதி காட்சிப்படுத்தப்பட்டதிலிருந்து ஒரு மாத காலப்பகுதிக்குள் செய்யப்படவேண்டும். அத்தகைய ஆட்சேபணைகள் கீழ்வருவனவற்றால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்:

- ஆட்சேபிப்பதற்கான ஏதுக்களைக் கூறுகின்ற ஆட்சேபிப்பவரின் மற்றும் வேறு எந்நபரினதும் சத்தியக் கடதாசி
- ஆட்சேபணைகளை ஆதாரப்படுத்துகின்ற சான்றுகள்

ஒரு மாத காலப்பகுதி முடிவுறுவதனைத் தொடர்ந்து மாவட்டப் பதிவாளர் அல்லது பதிவாளர் தலைமையதிபதி குறிப்பிட்ட விண்ணப்பம், அளிக்கப்பட்ட சான்றுகள், செய்யப்பட்டுள்ள ஆட்சேபணைகள் என்பனவற்றைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். மாவட்டப் பதிவாளர் அல்லது பதிவாளர்

தலைமையதிபதி எவரேனுமாளை வினவலாம் அல்லது ஏதேனும் சான்றைக் கோரலாம். இதனைத் தொடர்ந்து விண்ணப்பத்தின் உண்மைத் தன்மை தொடர்பில் திருப்திப்படின் விண்ணப்பம் அனுமதிக்கப்படும்.

மாவட்டப் பதிவாளர் விபரங்களை காணாமற்போன ஆட்கள் பற்றிய இடாப்பில் பதிதல் வேண்டுமென்பதுடன், காணப்படாமைக்கான சான்றிதழினை உறவினருக்கு வழங்குதலும் வேண்டும். பதிவாளர் தலைமையதிபதி இயைபான தகவல்களை பிரிவு 8 ஏ (1) இன் படி இலத்திரனியல் இடாப்பிலே பதிய வேண்டும்.

## விசாரணை ஆணைககுழுவொன்றினால் அல்லது விசேட சனாதிபதி ஆணைக்குழுவொன்றினால் அல்லது காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தினால் காணாமற் போனதாகக் கண்டறியப்படும் ஆட்கள் தொடர்பானது (பிரிவு 8 எ)

ஒரு ஆள் மறைந்து போயுள்ளதாக அல்லது காணாமற் போயுள்ளதாக,

- விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு (அத்தியாயம் 393)
- அல்லது 1978 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க விசேட சனாதிபதி ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட விசேட சனாதிபதி ஆணைக்குழு
- அல்லது 2016 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தினால்

கண்டறியப்படின், அவ்வாளின் உறவினர் அக்காணாமற் போன ஆள்தொடர்பில் காணப்படாமைக்கான சான்றிதழொன்றைத் தமக்கு வழங்கும்படி பதிவாளர் தலைமையதிபதிக்கு அல்லது அவ்வாள் எம்மாவட்டத்தில் கடைசியாக வசித்தாரோ அல்லது அவரது நிரந்தரமான வதிவிடத்தைக் கொணடிருந்தாரோ அம்மாவட்டத்தின் மாவட்டப் பதிவாளருக்கு விண்ணப்பிக்கலாம். அத்தகைய விண்ணப்பத்துடன் கீழ்வரும் ஆவணங்கள் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

- பதிவு செய்யப்படுவதற்கு நாடப்படும் ஆள் காணாமற் போயுள்ளாரென விண்ணப்பதாரர் நம்புவதற்கான ஏதுக்களை எடுத்துக் கூறுகின்ற சத்தியக்கடதாசி
- அத்தகைய காணாமற் போன ஆள் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் அல்லது விசேட சனாதிபதி ஆணைக்குழுவின் முடிவெடுப்புக்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்று அல்லது காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் இடைக்கால அறிக்கை அல்லது அறிக்கை.

மாவட்டப் பதிவாளர் காணாமற்போன ஆளின் விபரங்களை விபரமாக எடுத்துக் கூறி அறிக்கையொன்றைப் பதிவாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும். பதிவாளர் தலைமையதிபதி அவ் அறிக்கையினைக் கவனத்தில் கொண்ட பின்னர், காணாமற்போன ஆட்கள் பற்றிய இடாப்பில் காணாமற்போன ஆளைப் பதிவு செய்யும் படியும், காணப்படாமைக்கான சான்றிதழினை வழங்கும்படியும் மாவட்டப் பதிவாளரைப் பணித்தல் வேண்டும். பதிவாளர் தலைமையதிபதி தகவல்களை இலத்திரனியல் இடாப்பிலே பதிய வேண்டும்.

## காணப்படாமைக்கான சான்றிதழானது உறவினர்களால் கீழ்வருவன தொடர்பில் பயன்படுத்தப்பட முடியும்:

- ஏதேனும் சமூக சேமநலத் திட்டத்தின் கீழான நன்மைகளுக்காக விண்ணப்பிப்பதற்கும்
- காணாமற்போன ஆளின் ஆதனங்களையும் சொத்துக்களையும் மாவட்ட நீதிமன்றத்தின் மேற்பார்வையின் கீழ் தற்காலிகமாக முகாமைசெய்வதற்கும் காணாமற்போன ஆளில் தங்கி வாழும் பிள்ளைகளுக்காக தற்காலிக பாதுகாவலராகச் செயலாற்றுவதற்கும்.

பிரிவு 8 ஒ (2) எல்லா நிறுவனங்களும், அதிகாரங்கொண்டுள்ள ஆட்களும் காணாமற்போன ஆளின் நிலைமைக்கான எண்பிப்பாக காணப்படாமைக்கான சான்றிதழை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

## மேன்முறையீடுகள்

மாவட்டப் பதிவாளருடைய முடிவில் திருப்தியடையாத விண்ணப்பதாரர் ஒரு மாத காலப்பகுதிக்குள் பதிவாளர் தலைமையதிபதிக்கு மேன்முறையீடு செய்யலாம். மேலும் பிரிவு 8 ஊ ஆனது பதிவாளர் தலைமையதிபதியின் முடிவில் அதிருப்தியுறுகின்ற விண்ணப்பதாரர் அல்லது விண்ணப்பத்தினை ஆட்சேபிக்கின்ற நபர் ஒரு மாத காலப்பகுதிக்குள் மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க இயலும்.

## வலிதுடைமை

பிரிவு 5(2) ஆனது அமைச்சர் குறிப்பிட்ட இச்சட்டத்தின் நடைமுறை காலப்பகுதியினை ஐந்து வருட காலப்பகுதி வரையில் நீடிக்க இயலும். இந்நீடிப்பானது இச்சட்டத்தின் காலாவதித் திகதிக்கு ஒரு மாத காலப்பகுதிக்கு முன்னர் வர்த்தமானியிலே பிரசுரிக்கப்படுகின்ற கட்டளையொன்றின் மூலமாக மேற்கொள்ளப்படுதல் ஆகும்.

பிரிவு 8 ஓ (1) ஆனது காணப்படாமைக்கான சான்றிதழானது அதில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் இருந்து இரண்டு வருட காலத்திற்கு வலிதுடையதாகும் எனக் குறிப்பிடுகின்றது.

காணாமற்போன ஆளின் எச்சங்கள் மீட்டெடுக்கப்படின் அல்லது காணாமற் போன ஆளின் இறப்புத் தொடர்பான வேறு முடிவான சான்று கண்டெடுக்கப்படின், அத்தகைய சந்தர்ப்பங்களில் காணப்படாமைக்கான சான்றிதழ் வெற்றானதாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் மரண சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.

காணாமற்போன ஆள் உயிரோடிருக்கின்றாரெனக் கண்டுபிடிக்கப்படின் அதற்கிணங்க மாவட்டப்பதிவாளர், பதிவை இல்லாதாக்குவதற்கும் காணப்படாமைக்கான சான்றிதழை வெறிதாக்குவதற்கும் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

இரண்டு வருட காலப்பகுதியின் முடிவில் மாவட்டப் பதிவாளர் காணாமற் போன ஆளின் உறவினரிடம் காணாமற் போன ஆளின் நிலவரம் குறித்து விசாரித்து, கிடைக்கக் கூடியதாக உள்ள கீழ்க் காணப்படும் தெரிவுகளில் ஏதேனுமொன்றைத் தெரியலாம்.

- காணப்படாமைக்கான சான்றிதழின் காலப்பகுதியினை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கலாம்.
- உறவினர் விரும்புகின்ற போது அவர் மரண சான்றிதழுக்காக விண்ணப்பிக்கலாம் என்பதுடன் காணப்படாமைக்கான சான்றிதழும், காணாமற் போனவர் என மேற்கொள்ளப்பட்ட பதிவும் ரத்தாகும்.
- காணப்படாமைக்கான சான்றிதழின் காலப்பகுதியினை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிப்பதற்கு உறவினர் விரும்பாத பட்சத்தில் காணப்படாமைக்கான சான்றிதழானது ரத்துச் செய்யப்படலாம்.

## மரண சான்றிதழ்

இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் (2005 இலக்கம் 17) பிரிவு 8 இன் கீழ் மறைந்து போயுள்ளதாக அல்லது காணாமற் போயுள்ளதாக அறிக்கை செய்யப்படுகின்ற ஆட்கள் தொடர்பில் மரண சான்றிதழினைப் பெற்றுக் கொள்ள முடியும். எவ்வாறாயினும் இத்திருத்தத்தின் பிரிவு 7 ஆனது காணாமற் போயுள்ள ஆள் ஒருவர் தொடர்பில் காணப்படாமைக்கான சான்றிதழ் வழங்கப்பட்டிருக்குமாயின் அச்சான்றிதழ் ரத்து செய்யப்படும் வரையில் அதே காணாமற் போன ஆள் தொடர்பில் மரண சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

## மரண சான்றிதழினை காணப்படாமைக்கான சான்றிதழாக மாற்றுதல்

பிரிவு 8 ஔ ஆனது, முன்பதாகவே காணாமற் போனோர் தொடர்பில் மரண சான்றிதழைப் பெற்றுக்கொண்ட அல்லது மரண சான்றிதழைப் பெறுவதற்காக விண்ணப்பித்துள்ள காணாமற் போனோரின் உறவினர்கள் தற்போது பிரிவு 8 எ (1) இல் கூறப்படுவதற்கிணங்க காணப்படாமைக்கானச் சான்றிதழினைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிப்பதற்கான செயன்முறையினைக் கூறுகின்றது. பதிவாளர் தலைமையதிபதி அந்த மரண சான்றிதழை அல்லது மரண சான்றிதழைப் பெறுவதற்கான விண்ணப்பத்தினை ரத்துச் செய்துவிட்டு அதற்குப் பதிலாக காணப்படாமைக்கான சான்றிதழினை வழங்க வேண்டும்.

## குற்றங்கள்

காணாமற் போனதாகப் பதிவு செய்யப்பட்ட நபர் உயிருடன் உள்ளார் என்பது தெரிந்தும் அது பற்றிய தகவல்களைப் பதிவாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கத் தவறுதல் குற்றமாகக் கருதப்படும். காணப்படாமைக்கான சான்றிதழொன்றிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் உயிரோடிருக்கின்றாரென அறிந்து கொண்டு அல்லது நம்புவதற்குக் காரணமுடையவராகவிருந்து கொண்டு இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காணப்படாமைக்கானச் சான்றிதழொன்றை நேர்மையீனமாக அல்லது மோசடியான முறையில் பயன்படுத்துதலும் குற்றமாகக் கருதப்படும்.